**செ. கு. எண்: 032** **நாள்: 27.02.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – 27.2.2019

**கோயம்புத்தூர் மாவட்டம்,** பொள்ளாச்சி வட்டம், ஆழியார் அணையிலிருந்து, பொள்ளாச்சிக் கால்வாய் வழியாக, எலவக்கரை குளத்தின் கீழ் பாசனம் பெறும் ஆயக்கட்டு நிலங்களுக்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி எலவக்கரை குளத்து விவசாயிகள் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. எலவக்கரை குளத்து விவசாயிகள் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆழியார் அணையிலிருந்து, பொள்ளாச்சிக் கால்வாய் வழியாக, எலவக்கரை குளத்தின் கீழ் பாசனம் பெறும் ஆயக்கட்டு நிலங்களுக்கு, தற்போதைய நீர் இருப்பு மற்றும் நீர்வரத்தினைப் பொறுத்து, **1.3.2019 முதல் 11 நாட்களுக்கு** விநாடிக்கு 60 கன அடி வீதம் மொத்தம் 57 மி.க. அடி தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சமத்தூர் கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன் ஜல்லிபட்டி, துறையூர், கம்பாலபட்டி மற்றும் கரியாஞ்செட்டிபாளையம் கிராமங்களின் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**